கடலூர் கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள்

# வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணியில் தீவிரமாகப் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



கடலூர், நவ.1-

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகளுக்கும் மற்றும் கழக தோழர்களுக்கும், உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கும், வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கும் (BLA2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்களுக்கும் (Blc) வேளாண்மை உழவர்நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2024ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிட்டுள்ளது.

கடலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து சட்ட மன்ற தொகுதிகளிலும், 27.10.2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர 04.11.2023 (சனிக்கிழமை), 05.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) - 18.11.2023 (சனிக்கிழமை) மற்றும் 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன் வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2024 அன்று 18 வயது நிரம்பக் கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2024-ஆம் ஆண்டு ஜனவரி 1-ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6லும், பெயர் நீக்கம் செய்திட படிவம் 7லும், வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட, ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற (Replacement Id Card) படிவம் 8லும், அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க (NRI Voters) படிவம் 6ஏ, ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க படிவம் 6பி, விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும்.

மேலும் வாக்கு சேர்ப்பதற்கு www.nvsp.in. மற்றும் www.voterportal.eci.gov.in என்ற இணைய தளத்திலும் விண்ணப்பிக்கலாம். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்புபவர்களும், பெயர் சேர்த்துக் கொள்ள வேண்டிய விண்ணப்படிவமான படிவம்6ஐ முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும்.

குறிப்பாக படிவம்6ன் கலம் IVல் மனுதாரரது முந்தைய முகவரியினை தவறாது எழுதிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

1. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் - 27.10.2023

2. பெயர்களைச் சேர்க்க / நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் - 27.10.2023 முதல் 09.12.2023 வரை

3. சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் - 04, 05.11.2023 மற்றும் 18, 19.11.2023

4. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் - 05.01.2024

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர மேயர், நகர, பேரூராட்சி, ஊராட்சிமன்ற தலைவர்கள், துணைத்தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (Blc) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்ட கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு:

வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2க்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (blc) இந்த பணியினை முழுமையாக இருந்து நாடாளுமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLOஉடன் இருந்து கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஜ்வாலா குட்டா அகாடமி ஆஃப் எக்ஸலன்ஸ் (ஹைதராபாத்) இடையே தமிழ்நாடு சென்னையை அடுத்த மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் செயல்பட்டு வரும் பேட்மின்ட்டன் அரங்கத்தில் ஜ்வாலா குட்டா அகாடமி ஆஃப் எக்ஸலன்ஸ்யின் பேட்மிட்டன் அகாடமி செயல்படுதல் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விளையாட்டு விடுதி மாணவர்கள் ஹைதராபாத்தில் உள்ள ஜ்வாலா குட்டா அகாடமி ஆஃப் எக்ஸலன்ஸில் முதல்கட்டமாக விளையாட்டு பயிற்சிகள் மேற்கொள்ளுதல் தொடர்பாகவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று (31.10.2023) சென்னையில் கையெழுத்தானது . இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, மற்றும் ஜ்வாலா குட்டா அகாடமி ஆஃப் எக்ஸலன்ஸ்நிருவாகி திருமதி. ஜ்வாலா குட்டா கலந்துகொண்டனர்.

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தெற்கு ஒன்றியம்

# நாகனி ரவி இல்ல திருமணம்!

## அமைச்சர்கள் கே.ஆர்.பெரிய கருப்பன் - எஸ்.ரகுபதி - அரசியல் கட்சியினர் வாழ்த்து!

சிவகங்கை. நவ.1-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தெற்கு ஒன்றிய செயலாளர் நாகனி ஆர். ரவி திருமதி ஆர்.ஜோதி ரவி, சகோதரர் ஆர்.போஸ் திருமதி. தேன்மொழி மகள் பிரிய தர்ஷினிக்கும் தேவகோட்டை தாலுகா மேல உச்சாணி கிராமத்தைச் சேர்ந்த ஆர். செல்லமுத்து - திருமதி ஜெயா ஆகியோரது மகன் கற்பூரசுந்தர பாண்டியன் என்ற விஜய் ஆகியோரின் திருமணம் தேவகோட்டை ராம் நகர் தாய் மஹாலில் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் நடைபெற்றது.

திருமணத்தினை கே.ஆர். பெரிய கருப்பன் அவரது மனைவி திருமதி. பிரேமா பெரியகருப்பன் ஆகியோர் நடத்தி வைத்தார்கள்.

மணமக்களை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, முன்னாள் அமைச்சர் மு. தென்னவன், எம்.எல்.ஏக்கள், எஸ். மாங்குடி, கரி.மாணிக்கம், முன்னாள் எம்.எல்.ஏக்கள் கே.ஆர். ராமசாமி, சுப.மதியரசன், எஸ். மாரியப்பன் கென்னடி, எஸ். முத்து துரை, என்.குணசேகரன், அ.கணேசன், த.சேங்கை மாறன், திருமதி ஜோன்ஸ்ருசோ, தா. ராமையா, மதார்சேட், பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, கரு.அசோகன், அம்பலமுத்து, பூபால சிங்கம், ரவிச்சந்திரன், நா.நெடுஞ்செழியன், குன்னக்குடி சுப்பிரமணியன், யோக கிருஷ்ண குமார், கே.பாலசுப்பிரமணியன், எஸ்.சண்முகவடிவேலு, பெரி. பாலா, துரை ஆனந்த், க. பொன்னுச்சாமி, நாகனி செந்தில் குமார், அழகையா, இளங்கோ, சொர்ணமூர்த்தி, அன்பு, சாகீர் உசேன், வி.காளி முத்து, ஆர்.சந்துரு, பி. பழனிவேல், எஸ்.மாதவன், முத்துகுமார் உட்பட மாவட்டம் முழுவதும் இருந்து பல்வேறு அரசியல் கட்சியினர் மணமக்களை வாழ்த்தினார்கள்.

முன்னதாக தெற்கு ஒன்றிய செயலாளர் நாகனி ரவி வரவேற்றுப் பேசினார்.

மாவட்ட பிரதிநிதி ஊராட்சி மன்ற துணை தலைவர் கா.ராஜா நன்றி கூறினார்.

மணவிழா ஏற்பாடுகளை நாகனி ஆர்.ரவி - திருமதி ஆர். ஜோதி, ஆர்.போஸ், பி. தேன்மொழி, ஆர்.செல்லத்துரை, திருமதி. செ.ஜெயா ஆகியோர் செய்திருந்தார்கள்.

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள் 100

# நவம்பர் 2023 மாத நிகழ்வுகள் 10

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!



| வ.எண் | நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சி ஏற்பாடு | தலைமை | சிறப்பு அழைப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 1. 02/11/23 09.00AM | தலைவர் கலைஞர் எழுதிய "சேரன் செங்குட்டுவன்" நாடகம் மீண்டும் அரங்கேற்றம் | மாவட்ட, மாநகர நிர்வாகிகள் | இரா.மூக்கன், லீலா வேலு, பொன்செல்லையா, வி.சரோஜினி | அன்பகம் கலை கழக இணை அமைப்பு செயலாளர் |
| 2. 03/11/23 09.00AM | சட்ட கல்லூரியில் மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி தலைப்பு : மாநில சுயாட்சி, அரசியல் சட்ட மாண்புகளை காப்போம் | மாவட்ட, மாநகர வழக்கறிஞர் அணி | கே.ஏ.வி.தினகரன் மாவட்ட அமைப்பாளர் எம்.பன்னீர்செல்வன் மாநகர அமைப்பாளர் | என்.ஆர்.இளங்கோ.M.A.B.L., M.P மாநில அணி செயலாளர் |
| 3. 04/11/23 06.00PM | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் - 39,39A திருவெறும்பூர் பகுதி | ஐ.செல்வராஜ் வினோத் கனகராஜ் | தமிழ்.க.அமுதரசன் தலைமை கழக பேச்சாளர் |
| 4. 05/11/23 06.00PM | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் -12,12A மலைக்கோட்டை பகுதி | ஜெ.சிவகுமார் பி.ஜெயச்சந்திரன் | தமிழ். சாதிக் தலைமை கழக பேச்சாளர் |
| 5. 18/11/23 08.00AM | மாவட்ட கழகம் சார்பில் திருச்சி கிழக்கு தொகுதியில் கழக கொடியேற்றுதல், மற்றும் தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் வகையில் அணிகளுக்கு கருத்துரை வழங்கும் விழா | திருச்சி தெற்கு மாவட்ட கழகம் | மாவட்ட கழக செயலாளர் | க. துரை முருகன் கழக பொதுச்செயலாளர் 23 கழக சார்பு அணிகளுக்கு கருத்துரை வழங்குதல் (மாவட்டம் / மாநகரம்) |
| 6. 19/11/23 09.00AM | தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் திரைப்பட கலைஞர்கள் பங்கேற்கும் கருத்தரங்கம் | மாவட்ட, மாநகர தொண்டர் அணி | என்.ஏ.உதயகுமார் மாவட்ட அமைப்பாளர் ஆ.தினகரன் மாநகர அமைப்பாளர் | பெ.சேகர் மாநில அணி செயலாளர் கருத்தரங்கம் திரைப்பட நடிகர். தம்பி ராமையா |
| 7. 19/11/23 06.00PM | தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் பொதுக்கூட்டம் | வையம்பட்டி தெற்கு ஒன்றியம் | வி.ஏ.ராஜேந்திரன் ஒன்றிய செயலாளர் | .மா.சுப்பிரமணியன் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு சுகாதாரத்துறை அமைச்சர் |
| 8. 26/11/23 07.00AM | திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம் 11 ஊராட்சிகளில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா கல்வெட்டு திறப்பு மற்றும் கொடியேற்று விழா | திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம் | கே.எஸ்.எம்.கருணாநிதி ஒன்றிய செயலாளர் | திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் |
| 9. 26/11/23 06.00PM | தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் பொதுக்கூட்டம் | கலைஞர் நகர் பகுதி கழகம் | ஜி.மணிவேல் பகுதி செயலாளர் | எ.வ.வேலு திருவண்ணாமலை தெற்கு மாவட்டகழக செயலாளர் தமிழ்நாடு பொதுப்பணித்துறை அமைச்சர் |
| 10. 28/11/23 06.00PM | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் - 17,17A மார்க்கெட் பகுதி | எஸ்.மனோகரன் ஆர்.எம்.சுப்ரமணியன் | மண்ணை.இளங்கோ தலைமை கழக பேச்சாளர் |

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
செயலாளர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

அம்பத்தூரில் கலைஞர் நூற்றாண்டு விழா! பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை!

# ஆர்.எஸ்.பாரதி - ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் - நாஞ்சில் சம்பத் சிறப்புரை!

## பி.கே.மூர்த்தி எம்.சி. தலைமை! மேயர் பிரியா ராஜன் - ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. - டி.எஸ்.பி.இராஜகோபால் -எம்.டி.ஆர்.நாகராஜ் பங்கேற்பு!

சென்னை, நவ.1-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், உடன்பிறப்புகள் கொண்டாடும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக்கூட்டம் 4.11.2023 - சனிக்கிழமை அன்று மாலை 6.00 மணி அளவில் அம்பத்தூர் - ஓ.டி. பேருந்து நிலையத்தில் நடைபெறுகிறது.

இம்மாபெரும் பொதுக் கூட்டத்திற்கு தலைமைச் செயற்குழு உறுப்பினரும், மண்டலக் குழுத் தலைவருமான பி.கே.மூர்த்தி தலைமை வகிக்கிறார்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே. சேகர்பாபு மற்றும் மேயர் திருமதி பிரியா ராஜன், பகுதிச் செயலாளர்கள் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., டி.எஸ்.பி. இராஜகோபால், எம். டி. ஆர். நாகராஜ், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் ஜி.சாந்தகுமாரி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ஜி.வி.நாகவள்ளி, எல்.டி.எப். மோகன், து. ஆயிரம், வி.ரமேஷ் (எ) நீலகண்டன், கு.கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் ஏ.பி.பூர்ணிமா, ஜெ.பாலமுருகன், மா.பச்சையப்பன், அ.திராவிட செல்வம், க.முரளி பாபு, க.கதிஜா, மா.ரமேஷ், வி.ரவீந்திரன், பு.வீரா, வெ. ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ப.மதி, எம்.குணசேகரன், மா.குப்புசாமி, க.ஜீவா, கோ.சேகர்லால், பொன். நவராஜ் ரவி, ஆ.இரா. அருண், எம்.ஹரிகிருஷ்ணன், எஸ்.பி.அரிகிருஷ்ணன், பி.வி.மூர்த்தி ஆகியோர் வரவேற்கின்றனர்.

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ஈ.வி. கே.எஸ்.இளங்கோவன், நாஞ்சில் சம்பத் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., ப.ரங்கநாதன், கே.சந்துரு, கே.எஸ்.இரவிச்சந்தரன், சங்கரி நாராயணன், தமிழன் பிரசன்னா, எஸ்.மணிமுடி, வே.உமாகாந்த், கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, சி.மகேஷ்குமார், பரிதி இளம் சுருதி, ஆர்.வரதன், கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.எம்.தேவன், புனிதவதி எத்திராசன், இசட் ஆசாத், கூ.பீ.ஜெயின், சரிதா மகேஷ்குமார், ஸ்ரீராமுலு, வே.வாசு ஐ.சி.எப். வ. முரளிதரன், ஏ.நாகராசன், சொ.வேலு, வி.சுதாகர், எம்.சாமிக்கண்ணு, செ.தமிழ் வேந்தன், எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி உள்பட பலரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

வட்டச் செயலாளர் மு. ரகு நன்றி கூறுகிறார்.

திருச்செந்தூர் கோவில் அறங்காவலர் குழுத் தலைவர்

# ஆர்.அருள்முருகன் தாயார் ஆர்.விஜயலட்சுமி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 1 –

திருச்செந்தூர் கோவில் அறங்காவலர் குழுத் தலைவர் ஆர்.அருள் முருகன் தாயார் ஆர்.விஜயலட்சுமி மறைவு செய்தி அறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

“கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :

திருச்செந்தூர் கோவில் அறங்காவலர் குழுத் தலைவர் ஆர்.அருள்முருகன் அவர்களுடைய தாயார் ஆர்.விஜயலட்சுமி அவர்கள் மறைவெய்தினார் என்ற துயரச் செய்தி கேட்டு வருந்தினேன்.

அவரது குடும்பத்தினர்க்கும் உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



நீட் விலக்கு நம்இலக்கு மாபெரும் கையெழுத்து இயக்கம் சென்னை வடக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் அமைப்பாளர் வெ.இன்பரசன் தலைமையில் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர்கள் முன்னிலையில் சென்னை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.இளைய அருனா தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.கருணாநிதி மற்றும் மாவட்ட கழக, பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகள் நிர்வாகிகள்,கழக செயல்வீரர்கள் மாணவ செல்வங்கள், பகுதி மக்கள் கலந்து கொண்டு ”நீட்க்கு எதிரான கையெழுத்து இயக்கத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயல்வீரர் கூட்டத்தில் மறைந்த முன்னாள் திருவள்ளூர் மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினரும் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினருமான கும்மிடிப்பூண்டி கி.வேணு திருவுருவப் படத்திற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ மலர் மாலை தூவி மரியாதை செலுத்தினார். அருகில் சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், மாநில மாவட்ட நிர்வாகிகள் திருத்தணி எம்.பூபதி, கே.திராவிடபக்தன், ஆர்.டி.இ.ஆதிசேசன், ஒ.ஏ.நாகலிங்கம், டாக்டர் வி.சி.ஆர்.குமரன், உதயமலர்பாண்டியன், சி.ஜெயபாரதி, எம்.மிதுன் சக்ரவர்த்தி, பா.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி.கிஷோர், மு. சுப்பிரமணியம், ராஜேஸ்வரிரவீந்திரநாத், சி.சு.ரவிச்சந்திரன், டி.கிறிஸ்டி, கூளூர் எம்.ராஜேந்திரன், எஸ்.மகாலிங்கம், கே.அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், வி.வினோத்குமார், ஜி.ரவீந்திர, பா.ஆர்த்திரவி, பி.டி.சந்திரன், பெ.பழனி, சி.என்.சண்முகம், சி.ஜெ.சீனிவாசன், எம்.ஜி. ஜோதிக்குமார், என்.கிருஷ்ணன், டி.ஆர்.கே.பாபு, அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.